Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

IV)ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி

1.வட்டப்பாதையில் இயங்கும் பொருளின் மீது செயல்படும் விசையானது (F) பொருளின் நிறை (m), திசைவேகம் (v), மற்றும் வட்டப்பாதையின் ஆரம் (r) ஆகியவற்றைப் பொருத்தது, எனில் விசைக்கான சமன்பாட்டை பரிமாண பகுப்பாய்வு முறையில் பெறுக. (மாறிலி k = 1)

2.பிழைகளின் பெருக்கம் பற்றி நீவிர் அறிந்தது என்ன? கூட்டல் மற்றும் கழித்தலில் பிழைகளின் பெருக்கத்தை விவரி.

3.SI அலகுமுறை என்பது யாது? அதன் சிறப்பியல்புகளைக் கூறு.SI அலகு முறையின் ஏழு அடிப்படை அளவுகளையும் அட்டவணைப்படுத்து.

III)ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி

4.SI அலகு முறையின் சிறப்பியல்புகளைக் கூறு.

5.பரிமாணத்தில் ஒருபடித்தான நெறிமுறை பற்றி விவரி.

6.முக்கிய எண்ணுருக்களை கணக்கிடுவதன் விதிகளைத் தருக்க.

7.பரிமாண பகுப்பாய்வின் வரம்புகள் யாவை?

8.பரிமாணப் பகுப்பாய்வின் வரம்புகள் யாவை?

9.பரிமாண பகுப்பாய்வின் வரம்புகள் என்ன?

II)ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி

10.கீழ்க்காணும் எண்களுக்கான முக்கிய எண்ணுருக்களைத் தருக.
600800

11.ஒளி ஆண்டு என்றால் என்ன? இதன் மதிப்பு யாது?

12."பாராலாட்டிக் நொடி" அல்லது பர்செக் வரையறு

13.பரிமாணங்களின் ஒரு படித்தான நெறிமுறை என்றால் என்ன?

14.ஒளி ஆண்டு வரையறு. அதன் மதிப்பைக் கூறுக.

15.சந்திரசேகர் எல்லை என்பதன் பொருள் என்ன? அதன் மதிப்பைக் கூறுக.

I)சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

16.ஒரு கோளத்தின் ஆரத்தை அளவிடுதலில் பிழை 2% எனில், அதன் கனஅளவைக் கணக்கிடுதலின் பிழையானது_____.
(a) 8% (b) 2% (c) 4% (d) 6%

17.கீழ்கண்ட இணைகளில் ஒத்த பரிமாணத்தை பெற்றுள்ள இயற்பியல் அளவுகள்.
(a) விசை மற்றும் திறன் (b) திருப்புவிசை மற்றும் ஆற்றல் (c) திருப்புவிசை மற்றும் திறன் (d) விசை மற்றும் திருப்புவிசை

18.$(\mu_0\varepsilon_0)^{-1/2}$ ன் பரிமாணத்தைக் கீழ்கண்டவற்றுள் எது பெற்றிருக்கும்?
(a) நீளம் (b) காலம் (c) திசைவேகம் (d) விசை

19.ஒரே மாதிரியான பரிமாணங்கள் பெற்றுள்ளவை _____
(a) விசையும் உந்தமும் (b) தகைவும் திரிபும் (c) அடர்த்தியும் நீளடர்த்தியும் (d) வேலையும் நிலையாற்றலும்

20.ஒரு துகளின் திசைவேகம்,$v = At + \frac{B}{t}$ எனக் குறிப்பிட்டால் A மற்றும் B களின் பரிமாணங்கள்?
(a) L,LT^{-1} (b) LT^2, LT (c) LT^2, L (d) L,LT